***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//33 /2020 |
| | : | Prosecution P.W - 4 |
| NAME | : | முருகன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வயது முதிர்வு காரணமாக வேலை எதுவும் பார்க்கவில்லை. சாட்சி காஜா மைதீன் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 20.12.2018 ம் தேதியன்று இரவு 9.30 மணிக்கு நானும், சாட்சி காஜா மைதீனும் வழக்கின் சம்பவ இடத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த போது அங்கு வந்த கடையநல்லூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் கடையநல்லூர் காவல் நிலைய குற்ற எண் 395/2018 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் முன்வைத்து பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் பின்னர் 21.30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து TN 76AD 0888 என்ற பதிவெண் கொண்ட Hero passion pro மோட்டார் சைக்கிள் ஒன்றை எங்கள் முன்பிற்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்று அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//33 /2020 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | காஜாமைதீன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வயது முதிர்வு காரணமாக வேலை எதுவும் பார்க்கவில்லை. தென்வடல் தெரு கருப்பையா மகன் முருகன் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 20.12.2018 ம் தேதியன்று இரவு 9.30 மணிக்கு நானும், சாட்சி முருகன் என்பவரும் வழக்கின் சம்பவ இடத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த போது அங்கு வந்த கடையநல்லூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் கடையநல்லூர் காவல் நிலைய குற்ற எண் 395/2018 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் முன்வைத்து பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் பின்னர் 21.30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து TN 76AD 0888 என்ற பதிவெண் கொண்ட Hero passion pro மோட்டார் சைக்கிள் ஒன்றை எங்கள் முன்பிற்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்று அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//33 /2020 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | சம்சுமீராள் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அசா.1 எனது கணவர். 19.12.2018 ம் தேதி மதியம் 12.20 மணிக்கு என்னுடைய மகளை பள்ளியில் விடுவதற்கு நானும், அசா.1 ம் என் மகளும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். ரகுமானியபுரம் 5 வது தெருவில் நாங்கள்சென்றுகொண்டிருக்கும் போது ஆஜர் எதிரிகள் எங்கள் இருசக்கர வாகனத்தை வழிமறித்து தேவுடியா மகன், புண்ட மகன் என அசிங்கமாக பேசி அவர்கள் கொண்டு வந்த கம்பியை வைத்து என் கணவரை தலையில் அடித்தார்கள். நான் என் மகளை பாதுகாப்பதற்காக பக்கத்தில் 4 வது தெருவில் இருக்கும் நவாஸ்கான் என்பவரை அழைத்து வந்தேன். என் கணவரை அங்கு வந்த போக்கு ஆட்டோவில் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கிருந்து திருநெல்வேலி ஐக்கிரவுண்ட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். ஏனென்றால் என் கணவர்

நியூரோ patient என்பதால் என் கணவருக்கு தலையில் அடிபட்டதால்அதிகமான ரத்த கசிவு இருந்ததால் ஸ்கேன் செய்ய தென்காசி அரசு மருத்துவமனையில் வசதி இல்லாததால் திருநெல்வேலி ஐக்கிரவுண்டுக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை செய்ய போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi

Judicial Magistrate,

Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//33 /2020 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | **சுலைமான்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வெளிநாட்டில் வேலை பார்த்து தற்போது ஓய்வில் வீட்டில் இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1 வது எதிரி எனது அக்கா மகன், 2 வது எதிரி என்னுடைய தம்பி. எங்களுக்குள் ஏற்கனவே சொத்து பிரச்சினை இருந்தது. சொத்து பிரச்சினை சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நடைபெற்று அதில் எனக்கு சாதகமாக தீர்ப்பு பிறந்தது. 19.12.2018 மதியம் 12.20 மணிக்கு நான் மற்றும் எனது மனைவி சம்சுமீராள், எனது மகள் சபியா சர்மியை பள்ளியில் விடுவதற்காக என் இருசக்கர வாகனத்தில் சென்றோம். ரகுமானியபுரம் 5 வது தெருவில் நடுவில் 1 வது எதிரியின் TN 76AD 0888 என்ற Passon pro இருசக்கர வாகனத்தை நடுத்தெருவில் குறுக்காக விட்டிருந்தார்கள். நான் அதை கடந்து ஓரமாக ஒதுங்கி சென்ற போது 1 வது எதிரி என்னை மறித்து தேவுடியா மகனே, புண்டமகனே என்று அசிங்கமாக பேசினார். உன்னைதான் எதிர்பார்த்து காத்திருந்தேன் என வண்டியை மறித்தான். நான் ஒரு காலை ஊன்றுவதற்கு முன்

இரண்டாவது எதிரி என் வண்டியை ஓங்கி மிதித்தார்.

அதில் நான், என் மகள், மற்றும் மனைவி கீழே விழுந்து விட்டோம். கையை ஊன்றி எழுவதற்கு முன் ஆஜர் எதிரிகள் இருவரும் கையில் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியை எடுத்து அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். என்னுடைய தலையில் முன் பகுதியிலும், பின் பகுதியிலும் இரும்பு கம்பியை வைத்து அடித்து விட்டு உன்னை கொன்றால் தான் சொத்து பிரச்சினை தீரும் என சொன்னார்கள். பின்னர் நவாஸ்கான் என்பவர் அங்கு வந்து சத்தம் போட்டார். அதன் பின் 1வது எதிரி என்னுடைய வயிற்றில் மிதித்து தேவுடியா மகனே நீ சாவுல என்றும் நவாஸ்கான் வந்ததால் உன்னை விட்டு விட்டோம், உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என சொன்னார். கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு போக்கு ஆட்டோவில் சென்று விட்டேன் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை செய்ய போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தென்காசியிலிருந்து திருநெல்வேலி ஐக்கிரவுண்ட் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். திருநெல்வேலியில் இருக்கும் போது அங்கு போலிஸார் வந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை செய்ய போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi